செய்தி வெளியீடு எண் : 402 நாள் : 01.03.2023

## செய்தி வெளியீடு

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மாண்புமிகு இந்திய குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, மாண்புமிகு இந்திய குடியரசு துணைத் தலைவர் திரு. ஜகதீப் தன்கர், மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.ஆர்.என். ரவி, ஆகியோர் பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் 70-வது பிறந்தநாளையொட்டி, மாண்புமிகு இந்திய குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு அவர்கள் எழுதியுள்ள பிறந்தநாள் வாழ்த்துக் கடிதத்தில், தங்களுக்கு எனது மனமார்ந்த பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, நல்ல ஆரோக்கியமும் மகிழ்ச்சியும் கிடைத்திடவும், மேலும் பல ஆண்டுகள் தொடர்ந்து நாட்டிற்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றிடவும் வாழ்த்துகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

மாண்புமிகு இந்திய குடியரசு துணைத் தலைவர் திரு. ஜகதீப் தன்கர் அவர்கள் எழுதியுள்ள பிறந்தநாள் வாழ்த்துக் கடிதத்தில், எனது அன்பான பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதோடு, நாட்டிற்கு சேவையாற்றிட மகிழ்ச்சியான, ஆரோக்கியமான வாழ்க்கை கிடைத்திட வாழ்த்துகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.ஆர்.என். ரவி, அவர்கள் எழுதியுள்ள பிறந்தநாள் வாழ்த்துக் கடிதத்தில், 70வது பிறந்தநாள் காணும் தாங்கள் நீண்ட ஆயுளுடனும், நிறைந்த ஆரோக்கியத்துடனும் வாழ பிறந்தநாள் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

•••••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in